1975 அக்டோபர் 28]

எழுதமாட்டார்கள். 'இன்ன குற்றம் செய்த காரணத்திற்காக இவர்மீது இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படுகிறது' என்றுதான் எழுதுவார்கள். சில நேரங்களில் அவர்களே நடவடிக்கை எடுத்து விடுகிறார்கள்.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : ஊழல் குற்ற விசாரணை முடிவடைந்துள்ளதா ? அதுபற்றிய விவரம் அரசுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : விஜிலன்ஸ் துறையினுடைய புலன் விசாரணை விவரத்தை அண்மைக்காலத்திலே தெரிவித்திருக்கலாம். அதைப் பற்றி எனக்குத் தெரியாது.

Strikes by Doctors in Government Hospitals.

*35 Q.—THIRU G. SWAMINATHAN (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Health be pleased to state :

(*a*) whether there have been strikes by Doctors in the Government Hospitals of the State;

(*b*) if so, the details thereof;

(*c*) the manner and extent to which the public were affected; and

(*d*) the steps contemplated by the Government to prevent recurrence of such strikes ?

அரசாங்க மருத்துவ மனைகளில் மருத்துவர்களின் வேலை நிறுத்தம்

திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம் மாநிலத்தில் உள்ள அரசு மருத்துவ மனைகளில் பணிபுரியும் மருத்துவர்கள் வேலைநிறுத்தம் செய்துள்ளனரா ?

(இ) ஆமெனில், அது குறித்த விவரங்கள் யாவை ?

(உ) பொதுமக்கள் எந்த முறையில், எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டனர் ?

(எ) அந்த மாதிரி வேலை நிறுத்தங்கள் மீண்டும் நிகழாவண்ணம் தடுக்க அரசு மேற்கொள்ளக் கருதியுள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ), (உ) & (எ) எழாது.

Assistance from World Bank

*36 Q.—THIRU V. VENGA : Will the Hon. the Minister for Co-operation be pleased to state the details of the assistance sought from the World Bank for the Slum Clearance Board in the State ?

உலக வங்கியிடமிருந்து நிதி உதவி

திரு. வி. வெங்கா : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இம் மாநிலத்தில் குடிசை மாற்று வாரியத்திற்காக உலக வங்கியிடமிருந்து கேட்கப்பட்ட நிதி உதவியின் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : உலக வங்கியிடமிருந்து தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் எவ்வித உதவியும் கேட்கப்படவில்லை.

திரு. வி. வெங்கா : கேட்கவில்லையா, கேட்டது கிடைக்கவில்லையா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : கேட்கவில்லை.

திரு. வி. வெங்கா : மத்திய அரசு குடிசை மாற்று வாரியத்திற்கு இது வரை எவ்வளவு உதவி செய்திருக்கிறதென்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : குடிசை மாற்று வாரியத்திற்கென்று இல்லாமல், சுகாதார வசதிகளுக்காக இரண்டு ஆண்டுகளாக பணம் கொடுத்து, அதுவும் நிறுத்தப்பட்டுவிட்டது. அதன்பிறகு நம்முடைய மாநில சர்க்காரே அதனுடைய செலவுகளை ஏற்றுக்கொண்டு வருகிறது.